DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure)
***
IN THE COURT OF SUBORDINATED JUDGE MADURANTAKAM

Calender :
Miscellaneous : SC No.7/2017
Deposition of Witness for : PW 1

| | |
|---|---|
| Name. | திரு. பாலசந்திரன் |
| Father /Husband Name | |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day 13.08.2025

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் சோத்துப்பாக்கத்தில் டைல்ஸ் கடை வைத்துள்ளேன். கடந்த 8.6.2011 அன்று இரவு 8.45 மணிக்கு மேல் என் கடையில் இருந்து என் சொந்த ஊரான குறும்பிறை கிராமத்திற்கு என் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். அப்பொழுது இரும்புலி கிராமம் அருகே செல்லும் பொழுது 3 நபர்கள், அவர்களில் ஒருவர் கையில் கத்தியுடன் என் வாகனத்தை நிறுத்தினார்கள். அவர்கள் என் இரு கைகளையும் தூக்க சொன்னார்கள். அவர்கள் என் பாக்கெட்டில் இருந்த செல்போன் மற்றும் தொகை ரூ.7000/– யை எடுத்துக் கொண்டார்கள். அப்பொழுது எனக்கு தெரிந்த நபர்கள் என்னைப் பார்த்து நின்றார்கள். உடனே அந்த மூவரும் செல்போன் மற்றும் அந்த தொகையை எடுத்துக் கொண்டு மூவரும் இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார்கள். அந்த மூன்று நபர்களில் ஆஜர் எதிரியும் அங்கு இருந்தார். அவர்தான் கத்தியைக் காட்டி பணத்தை எடுத்தவர். உடனே நான் மருவத்தூர் காவல் நிலையம் சென்று கூறினேன். அவர்கள் என்னை சித்தாமூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்க சொன்னார்கள். இரவு 10.00 மணி அளவில் சித்தாமூர் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். எதிரிகள் வந்த வாகனம் புதுவையில் பதிவு செய்த வாகனமாகும். **நான் அளித்த புகார் மனு அ.த.சா.ஆ.1.** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

2) சம்பவ தேதியில் எதிரியைப் பார்த்ததாக கூறியதற்கு பின்னர் இன்று தான் நீதிமன்றத்தில் எதிரியைப் பார்க்கிறேன். பணம், செல்போன் மற்றும் சிம்கார்டு ஆகியவற்றை இவ்வழக்கு சம்மந்தமாக நான் திரும்ப பெற்றுக் கொள்ளவில்லை. நான் கையை தூக்கி நின்று அமைதியாக நின்றதாக போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். போலிசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தனர். என்னை மூன்று முறை போலிசார் விசாரித்தார்கள். விசாரித்து வாக்குமூலம் வாங்கியதை நான் படித்துப் பார்க்கவில்லை. என் சம்மந்தியை ஞானசேகரன் கடத்தியதாக குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். புகாரை நான் சம்பவ நாள் அன்றே காவல் நிலையத்தில் கொடுத்தேன். நான் முதலில் மருவத்தூர் காவல் ஆய்வாளரிடம் கூறினேன். அவர்கள் சித்தாமூர் செல்லுமாறு கூறினார்களா. மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் வைத்து புகாரை எழுதி சித்தாமூர் காவல் நிலையத்தில் கொடுத்தேன்.

3) புகாரை என்னுடன் வந்தவர் எழுதினார். புகாரில் உள்ள இடைசெருகல் மற்றும் அடித்தல் திருத்தல்களை யார் செய்தது என்றால் என்னுடன் வந்தவர் அவ்வாறு செய்திருக்கலாம். என் சம்மந்தியை கடத்திய வழக்கை காவல் துறையினர் நிறைய நபர்களை அழைத்து வந்து விசாரித்த விவரம் எனக்குத் தெரியும். அது சம்மந்தமாக நான் காவல் நிலையம் சென்றுள்ளேன் என்றால் சரிதான். புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது போடப்பட்ட பொய் வழக்கில் பொய் புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.